

Madurai Symposium 2007
Advancing Development
Building Alliances
24-29 September



செய்தியறிக்கை

செப்டம்பர் 27, 2007

# இந்திய மூலிகைகளுக்கு உலகளவில் ஏற்றுமதி வாய்ப்பு

மதுரை கூடலரங்கம் 2007 நிகழ்வின் நான்காம் நாளான இன்று மூலிகைச்செடி உற்பத்தியாளர் மற்றும் சேகரிப்போருக்கான கருத்தரங்கம் நடைபெற்றது. அறிமுக உரையாற்றிப் பேசிய களஞ்சியம் தொழிலகத்தின் முதன்மை நிர்வாகி தனபாலன், 'இந்தியா, சிங்கப்பூர், சீனா மற்றும் தெற்காசிய நாடுகளில் பல பாரம்பரிய மூலிகை மருத்துவத்திற்குப் பெயர் பெற்றவையாகத் திகழ்கின்றன. மேற்காணும் நாடுகளில் மட்டும் ஆண்டிற்கு 200 மில்லியன் டாலர் மதிப்பில் மூலிகைச் செடிகளின் விற்பனை நடைபெறுகிறது. ஆங்கில மருத்துவத்திற்கு நிகராக, இன்னும் சொல்லப்போனால் அதற்கும் மேலாகவே மூலிகை மருந்துகளின் பயன்பாடு உள்ளன. உலக சுகாதார நிறுவன மதிப்பீட்டின் படி வளர்ந்து வரும் நாடுகளில் 80 விழுக்காட்டு மக்கள் பாரம்பரிய மருத்துவத்தையே பெரிதும் சார்ந்துள்ளனர். உலகளாவிய அளவில் மூலிகை சார்ந்த வியாபாரம் மட்டும் 62 பில்லியன் டாலர் அளவிற்கு நடைபெறுகிறது. இது ஒவ்வொரு ஆண்டும் 7 விழுக்காடு வளர்ச்சி அடைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நமது நாட்டிலுள்ள 1500 வகையான மூலிகைச் செடிகள் மருத்துவப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாக வன மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது' என்றார்.

'மூலிகை சேகரிப்போர் தனித்த நிறுவனமாகத் தங்களை அடையாளப்படுத்த வேண்டும். அதற்குத் தற்போது உலகளாவிய அளவில் உருவாகியுள்ள சுயஉதவிக்குழுத் தத்துவம் நல்லதொரு வாய்ப்பாகும். குழுவாய் ஒன்றிணைவதன் வாயிலாக நீடித்த வாழ்வாதாரத்திற்கு உறுதி சேர்க்க இயலும்' என்று தானம் அறக்கட்டளையின் திட்டத்தலைவர் சிங்கராயர் கூறினார். பெங்களூர் நேச்சுரல் ரெமடிஸ் நிறுவனத்தின் துணை மேலாளர் தனது சிறப்புரையின்போது, 'இன்று உலகளவில் ஏற்பட்டுள்ள மூலிகைக்கான தேவையை மூலிகை சேகரிப்பால் மட்டுமே நிறைவு செய்துவிட முடியாது. அதிகளவில் சாகுபடி செய்வதை ஊக்குவிப்பது அவசியம். தரமான விதைகளைக் கொண்டு செய்யப்படும் மூலிகை சாகுபடியின் மூலமே தரமான மூலிகைச் செடிகளைப் பெற முடியும்' என்றார்.

காந்திகிராமம் லெட்சுமி சேவா சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் சக்தி ரஞ்சன் மூலிகைச் செடிகளின் உற்பத்தியும், சந்தைப்படுத்துதலும் குறித்துப் பேசும்போது, 'எந்த ஒரு நோய்க்கும் குணமாக்குதல் என்பதில் மூலிகை சார்ந்த பொருட்கள்தான் முன்னணியில் நிற்கிறது. சந்தைப்படுத்துதலைப் பொறுத்தவரை இருப்பதை விற்பனை செய்வதைவிட, தேவைப்படுவதை உற்பத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தர நிர்ணயமே விலை நிர்ணயத்திற்கு அடிப்படையாக விளங்குவதால் தரக்கட்டுப்பாட்டு முறைகளை ஒழுங்குபடுத்துவது மிகவும் அவசியம்' என்றார். சிறந்த முறையில் மூலிகை சேகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து பெங்களூரு நேச்சுரல் ரெமடிஸ் நிறுவனத்தின் நிர்வாகி குமரேசன் பேசினார். அழிந்து வரும் மூலிகைகளும், அவற்றின் பாதுகாப்பும், சந்தைப்படுத்துதலில் உள்ள பிரச்சனைகள், கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தரத்தினை வழங்குதல் போன்ற பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

களஞ்சியம் தொழிலகத்தைச் சார்ந்த நவமணி அனைவரையும் வரவேற்றார். தானம் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் வாசிமலை நிறைவுரையாற்றினார்.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தங்களன்புள்ள

இரா.சிவக்குமார்
ஊடக ஒருங்கிணைப்பாளர்

புகைப்படக்குறிப்புகள்

D4 P1 இந்திய சுயஉதவிக்குழுக் கூட்டமைப்புகளின் தேசிய அளவிலான மூன்றாவது கருத்தரங்கினை இந்தியன் வங்கியன் தலைவரும், மேலாண்மை இயக்குநருமான ஆர்.எஸ.சுந்தரராஜன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைக்கிறார்.

D4 P2 மூலிகைச் செடி உற்பத்தியாளர் மற்றும் சேகரிப்போருக்கான கருத்தரங்கில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினர்

D4 P3 நேற்று நடைபெற்ற கலை விழாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள்

D4 P4 குறுநிதியும், நிதிச் சேவையும் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்களில் தானம் அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் மா.ப.வாசிமலை உரையாற்றுகிறார்.

D4 P5 கர்நாடக மாநில நாட்டுப் புறக் கலைஞர்கள் நிகழ்த்திய கலை நிகழ்ச்சி

D4 P6 மதுரை துவரிமானைச் சேர்ந்த நாட்டுப்புறக் கலைஞர்களின் ஒயிலாட்ட நிகழ்ச்சி

D4 P7 கேரள மாநிலத்தைச் சேர்ந்த நாட்டுப்புறக் கலைஞர்களின் செண்டை மேள நிகழ்ச்சி